www.ecourtsindia.com

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 449/2018

16.08.2023. வா.சா. 1 திரு.ஆனந்தராஜ்

1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 2 ம் பிரதிவாதி வேல்சாமி மற்றும் நான் இணைந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி வழக்கில் சேர்த்துள்ளளோம். அவரை என்று தெரியுமா என்றால் பார்த்தது கிடையாது. 3 ம் பிரதிவாதி 02.02.2017 தேதியில் தாவா சொத்தை ரூ.2,73,750/- க்கு கிரையம் பெற்றுள்ளார் என்று அவரை ஒரு தரப்பினராக மனு செய்தேன் என்றால் சரிதான்.29.08.2018 ல் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்தை 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. ஆனந்தராஜ், 17.04.1985-ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். ஆனந்தராஜியிடமிருந்து 1ம் பிரதிவாதி 20.10.1997 ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.ஆனந்தராஜ் கிரையம் வாங்கியது மற்றும் 1, 3 பிரதிவாதி கிரையம் வாங்கிய ஆவணங்களை நகல் எடுத்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் என் பெயரிலோ அல்லது என் மூதாதையர் பெயரிலோ பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை பெயரிலுள்ள பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது.

3. நான் எப்போதாது தீர்வை செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. சேர்வைகாரன் என்பவருக்கு 4 ஆண் மக்கள் மற்றும் 4 பெண் மக்கள். அவர் என் தகப்பனார். சேர்வைகாரனின் தந்தை பெயர் புதியவன். புதியவனுக்கு வாரிசுகள் எத்தனை என்றால் 2 ஆண் மக்கள், ஒரு பெண். ஒன்று என் தந்தை சேர்வைகாரன் மற்றோருவர் கருப்பசாமி அவர் என் சித்தப்பா. என் அத்தை பெயர் தெரியாது. (சாட்சி தற்போது என் அத்தை பெயர் சீனியம்மாள் என்று கூறுகிறார்). புதியவனின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வைத்துள்ளேன் என்றால் சரிதான். சேர்வைகாரன் இறந்த தேதி 08.03.2018. அது வரை சொத்து பற்றி எனக்கு தெரியாது என்றால்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL060007902018/truecopy/order-2.pdf

சரிதான்.

4. என் தந்தை இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் என் கை வசம் உள்ளது. என் தாயார் காலமாகிவிட்டார்.

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL060007902018/truecopy/order-2.pdf